# தவக்காலம் 2ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இதமான இளங்காலைப் பொழுதில், இறையன்பை அள்ளிப் பருகி, விசுவாசத்தை மேலும் உறுதியாக்கி, இன்ப துன்பங்களை வெற்றி கொள்ள இன்றைய தவக்கால இரண்டாம் ஞாயிறு நமக்கு அழைப்பு விடுக்கிறது.

இறைவனை விட உய்ர்ந்ததும் உன்னதமானதும் எதுவும் இல்லை. அவர் அனுமதியின்றி நம் வாழ்வில் எதுவும் நடப்பதில்லை என்பது தான் அசைக்க முடியாத விசுவாசம். இவ்விசுவாசம் தான் ஆபிரகாமை விசுவாசத்தின் தந்தையாக உயர்த்தியது.

“ஆண்டவருக்கு அஞ்சுவோரே அவரிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்; உங்களுக்கு கைம்மாறு கிடைக்காமல் போகாது” என்று ஆண்டவரை பற்றிக் கொள்ள அறிவுறுத்துகிறது சீராக்கின் ஞான நூல். மகிமையான காரியங்களுக்கு மகத்தான நம்பிக்கையே பிறப்பிடம். இத்தகைய விசுவாசத்தை நமதாக்கும்போது இறைவன் நம்மை தனதாக்குவார்.

இன்றைய முதல் வாசகத்தில் தனது ஒரே மகனை பலியிடத் துணிந்த ஆபிரகாமின் விசுவாசம் விண்ணளவு உயர்ந்தது. அதுவே ஆபிரகாமை விசுவாசத்தின் தந்தையாக உயர்த்தியது. நாமும் நம் விசுவாசத்தை உறுதிப்படுத்துவோம்.

விசுவாசம் இல்லா இறைவேண்டலும், உண்மை இல்லா அன்பும், நம்பிக்கை இல்லா வாழ்வும் என்றும் நிரந்தமில்லை.

இதையே பாரதி,

“திண்ணிய நெஞ்சம் வேண்டும்;

நல்லவே எண்ணல் வேண்டும்”

என்கிறார். நன்மைகளின் போது நன்றியையும், போராட்டங்களின் போது முறுமுறுப்பையும் வெளிப்படுத்தாமல் விசுவாசத்தை அதிகமாக்கி இறைவனை நேசிப்போம்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில், “கிறிஸ்துவின் அன்பினின்று நம்மை யார் தான் பிரிக்க முடியும்?” என்று கிறிஸ்துவின் அரவணைப்பை அனுபவித்துக் கூறுகிறார் பவுல். கடவுள் தேர்ந்து கொண்டவர்களுக்கு எதிராய் யார்தான் குற்றம் சாட்ட இயலும்? அவர்கள் குற்றமற்றவர்கள் எனக் காட்டுபவர் கடவுளே! என்கிறார்.

ஆனால் இன்றைய உலகில் இரண்டு அங்குல நாக்கினால் குற்றம் சுமத்தி ஆறடி மனிதரைக் கூட சாய்த்து விடுகிறோம். உண்மையை அறியாமல் நமது கருத்துக்களுக்கு உறுப்புகள் உண்டாக்கி, உயிர் கொடுத்து உலவ விடுகிறோம். வெறுமையான மனிதனை வெறுக்கும் குற்றவாளியாக்கிவிடுகிறோம். இவையெல்லாம் இறைவனுக்கும் நமக்குமிடையே இடைவெளியை அதிகரித்து, இறையன்பை குறைக்கிறது.

இன்றைய நற்செய்தியில், “என் அன்பார்ந்த மைந்தர் இவரே; இவருக்குச் செவிசாயுங்கள்” என்ற பரம தந்தையின் குரல் இயேசுவே நமக்கு மீட்பர் என உணர்த்துகிறது. அன்று இச்சொற்களைக் கேட்ட சீடர்களால் இதனை தெளிவாக உணர இயலவில்லை.

நாமும் பல வேளைகளில் இறைவனின் குரலை அறியாமல் விலகிச் செல்கிறோம். எளியவருக்கு இரங்குபவன் இறைவனுக்கு கடன் கொடுக்கிறான் என்பதை வெறும் எழுத்துக்களாகவே பார்க்கிறோம். விழிகளை திறந்து வைத்து விட்டு, இதயத்தை மூடி விடுகிறோம். கைகளைக் கட்டிக் கொண்டு, கருணை என்பதை கடன் கொடுத்து விடுகிறோம்.

வறுமையையும் இயலாமையையும் பிறரில் காணும் போது இதய வீணை மீட்டப்படட்டும். கண்களில் கருணை மழை பொழியட்டும். கரங்கள் உதவிக் கவிதையை எழுதட்டும். அப்போது விசுவாசம் மேலோங்க இறையன்பு நமைச் சூழ உனக்கு விரைவில் நலமான வாழ்வு துளிர்க்கும் என்ற விவிலிய வார்த்தைகள் நிஜமாகும்.

முடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையும், முடிக்க வேண்டும் என்ற கட்டாயமும், முன்சென்று வழிநடத்துபவர் இறைவன் என்ற விசுவாசமும், முடியாத காரியத்தையும் முடித்துக் காட்டும் என்ற சிந்தனைகளோடு விசுவாசத்தில் உறுதிபட இத்திருப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. இறை விசுவாசத்தை விரும்புபவரே!

விசுவாச விதைகளை விதைக்க நீர் அழைத்த திருச்சபை தலைவர்கள், ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் ஆகியோரின் இறைப்பணி சிறக்க இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. விசுவசிப்பவர்களை வாழ்விப்பவரே எம் இறைவா!

உம் மேல் விசுவாசம் கொண்டு குணம் பெற தவிக்கும் நோயாளிகளின் வேதனையை மாற்றவும், நோயிலிருந்து விடுபட்டு குணம்பெறவும், புது வாழ்வு தந்து ஆசீர்வதித்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. எம் சார்பில் எம்மோடு இருப்பவரே இறைவா!

உம் அன்பிலிருந்து எம்மை பிரிக்கக் கூடிய எம் பாவ பழக்க வழக்கங்களை விட்டொழித்து, உம் அன்புப் பாதையிலிருந்து என்றும் விலகிடாமல் எம்மை பாதுகாத்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. விசுவாசிகளை வழிநடத்துபவரே இறைவா!

உம் அன்பினை உணர்ந்து கொள்ளாமல், விசுவாசக் குறைவோடு நடக்கும் பிள்ளைகளை கண்ணோக்கி, அவர்கள் இறை நம்பிக்கையில் உறுதிபட மனநிலையையும் சூழ்நிலையையும் உருவாக்கிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நன்றி: ஆசிரியை. **திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ்**, பாவூர்சத்திரம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com